வெளிச்சுவரில் அம்மன் படம். உள்ளே பிரகாசமாக எரிகிறது ஐந்து முக குத்துவிளக்கு. கோலமும் பூக்களுமாக அலங்காரத்தில் ஜொலிக்கிறது வாசல். அதைக் கழிவறை என்று சொன்னால் நம்ப முடியாது! கிராமத்தில் எல்லா வீடுகளின் கழிவறையும் அன்று களைகட்டி இருந்தது. காரணம், கழிவறைக்கான அழ(கி!)குப் போட்டி. நம்புங்க மக்கா... நம்ம நாகப்பட்டினத்தில்தான் இது நடந்தது.





நாகப்பட்டினத்தில் சுனாமியால் பெரும் பாதிப்புக்குள்ளான மீனவர் கிராமம் காமேஸ்வரம். இந்த கிராமத்தின் 350 வீடுகளில், ஃபின் டிரஸ்ட் (Friends In Need), கிராமாலயா, ஸ்கோப் ஆகிய தொண்டு நிறுவனங்கள் 'சூழல் மேம்பாட்டுச் சுகாதாரக் கழிவறை'களைக் கட்டித் தந்துள்ளன. தண்ணீர் இழப்பின்றி, கழிவை உரமாக மாற்றி சுற்றுச்சூழலை பாதுகாக்கும் இக்கழிவறைகளை கோயில் போல பராமரிக்கிறார்கள் மக்கள்.

ஒவ்வொரு வருடமும் இந்த கழிவறைக்கான அழகுப் போட்டிகளை நடத்தி, 'பியூட்டி டாய்லெட்' விருதுகளை வழங்குகின்றன தொண்டு நிறுவனங்கள். அண்மையில் நடந்தது இந்த ஆண்டு அழகுப்போட்டி.

இந்தக் கழிவறையில் 2 துவாரங்கள் இருக்கும். சிறுநீர், சுத்தம் செய்த தண்ணீரோடு தனியாகப் பிரிந்து செடிகளுக்கு சென்று விடும். சிறுநீரில் உள்ள ரசாயனங்கள் செடிகளின் வளர்ச்சியை ஊக்கப்படுத்துமாம். கழிவறையை பயன்படுத்தியபின் கழிவில் ஒரு பிடி சாம்பலை அள்ளிப்போட்டால் போதும். நீரூற்றத் தேவையில்லை. சாம்பல் கலந்த கழிவு ஒரு தொட்டியில் சேகரிக்கப்படும். 5 பேர் கொண்ட குடும்பம் இந்தக் கழிவறையை ஒரு வருடத்துக்கு பயன்படுத்தலாம். அதன்பின், கழிவுகள் சேகரித்த செப்டிக் டேங்க்கைத் திறந்தால் அருமையான உரம் தயார். சிறிதும் துர்நாற்றம் இருக்காது. எந்த தயக்கமும் இல்லாமல் தோட்டத்துக்குப் பயன்படுத்தலாம்.

சரி... அழகுப்போட்டிக்கு வருவோம்!

கழிவறையை அனைவரும் பயன்படுத்தி இருக்க வேண்டும். அழகாக வைத்திருக்க வேண்டும். கழிவுகளை உரமாக்கி அதைப் பயன்படுத்தி அருகில் தோட்டம் வைத்திருக்க வேண்டும் - இவை தான் போட்டி நிபந்தனை. விருது வாங்கும் ஆர்வத்தில் மகாஜனங்கள் சாமி படங்களையெல்லாம் வரைந்து வைத்து விட்டார்கள். சிலர் பலூன் தோரணம் கட்டியிருந்தனர். கட்டிடக்கலை வல்லுனர்கள் பெங்களூர் மாளவிகா, கொல்கத்தா கீதா - இருவரும் நடுவர்கள்.

முதல் பரிசு அஞ்சம்மாள்-அஞ்சப்பன் தம்பதியின் கழிவறைக்கு. இவர்கள் கழிவறையில் பொம்மைகளை அடுக்கி கொலுவே வைத்திருந்தனர். இரண்டாம் பரிசு நைனம்மாள்-பாலசுப்பிரமணியன் வீட்டுக் கழிவறைக்கு. மூன்றாமிடம் பிடித்தது அஞ்சம்மாள்-ஆரியசாமி வீட்டுக் கழிவறை.

பரிசளிக்க வந்த ஆட்சியர் முனியநாதனை, தங்கள் வீட்டு கழிவறையின் சேகரிப்பு டேங்கை திறக்க அழைத்தார்கள் முதலிடம் பிடித்த அஞ்சம்மாளும் அஞ்சப்பனும். புன்னகையோடு டேங்கைத் திறந்து மக்கிய உரத்தை அள்ளி நுகர்ந்து பார்த்து, மக்களுக்கு நம்பிக்கையூட்டினார் கலெக்டர்.

"பாதுகாப்பான குடிநீர், சுகாதாரமான கழிவறை - இவை இரண்டும் 60 சதவிகிதம் இந்தியர்களுக்கு கேள்விக்குறியாகவே இருக்கிறது. இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. வயிற்றுப்போக்கால் இந்தியாவில் ஒரு நாளில் 3 ஆயிரத்து 500 குழந்தைகள் இறக்கிறார்கள். 60 சதவிகிதம் மக்கள் நீர்நிலைகளை கழிவறையாகப் பயன்படுத்துகின்றனர். இதனால் நிலத்தடி நீர் பாதிக்கிறது. இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு நவீன கழிவறைகள் கட்டுவதும், மக்களுக்கு அதன் மீது ஆர்வத்தை ஏற்படுத்துவதும்தான். இந்தக் கழிவறைகளால் கிராமத்தில் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டுள்ளது. மக்களை ஊக்கப்படுத்தத்தான் இந்த அழகுப்போட்டி" என்கிறார் ஃபின் டிரஸ்ட் இயக்குனர் டாக்டர் சியாமா ரமணி.

புதுசா இருந்தாலும் நல்லாத்தான் இருக்கு!

- வெ.நீலகண்டன்

டாய்லெட் சேம்பரை திறந்து வைக்கும் கலெக்டர்

